4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 94/2022 நாள்: 27.02.2026 வா.சா.2 – தேவராஜ்**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் வாளவாடியில் துளசித்துண்டு என்ற தோட்டத்தில் வசித்து வருகிறேன். வாதி Sridharan எனக்கு நெருங்கிய உறவினர் மற்றும் நண்பர் என்றால் சரிதான். நான் வாளவாடி பஞ்சாயத்து தலைவராக முன்பு இருந்தேன் என்றால் சரிதான். நான் பஞ்சாயத்து தலைவராக இருந்த போது மேற்படி Sridharan எனக்கு உறுதுணையாக இருந்தார் என்றால் சரிதான், சின்னராசும் உறுதுணையாக இருந்தார் என்று சாட்சி கூறுகிறார். இதற்கு முன்பு நான் கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளோன், ஆனால் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க தற்போது தான் வந்துள்ளேன். வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களை படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். 1வது பிரதிவாதி கிரைய காலக்கெடுவிற்குள் கிரையம் எழுதி கொடுக்கவில்லை என்றால் மீத கிரைய தொகையை ஒப்பந்தம் செய்தவர், நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யலாம் என்ற வாசகம் கிரைய ஒப்பந்தத்தில் உள்ளதா என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். தற்போது மேற்படி சாட்சி ஆவணத்தை பார்த்து மீத கிரைய தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து கிரையத்தை முடித்து கொள்ளலாம் என்று எழுதப்பட்டுள்ளது என்று கூறுகிறார். வா.சா.ஆ.3 ஆவணத்திலும் மேற்கண்ட வாசகம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 மற்றும் 3 கிரைய ஒப்பந்தத்தில் வாதி Sridharan கிரைய ஒப்பந்த காலத்திற்குள் மீத கிரைய தொகைய கிரையம் கொடுப்பவருக்கு செலுத்தாவிட்டால் அதற்கு என்ன விளைவு என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி

வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் கிரையம் கொடுப்பவருக்கு சாதகமாக இல்லாமல், கிரையம் பெறுபவருக்கு ஒரு தலைபட்சமாக உள்ளது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தங்கள் யார் சொல்லி எழுதப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தற்போது சாட்சி கிரைய ஒப்பந்தத்தை சின்ராஜ் மகன் மோகன்ராஜ் தான் எழுதி வந்தார் என்று கூறுகிறார். யார் சொல்லி மேற்படி ஆவணங்கள் எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தங்களை வாதி Sridharan பார்த்து ஒப்புதல் அளித்த பிறகு அதை தயார் செய்து வந்திருப்பார்கள் என்று சொன்னால் சாட்சி வாதி Sridharan மேற்படி ஒப்பந்தங்களை பார்க்கவே இல்லை என்று கூறுகிறார். கிரைய ஒப்பந்தங்களில் கையொப்பமிடும் போது வாதி Sridharan படித்து பார்த்தார். பொதுவாக கிரையம் வாங்குபவர்கள் கிரைய ஒப்பந்தத்தை தயார் செய்து கொடுப்பார்கள் என்றால் சரிதான். 1வது பிரவாதி சின்ராஜிக்கு தாவா பூமி தவிர வேறு பூமி எதுவும் இல்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தங்கள் ஏற்படுத்துவதற்கு முன்பாக சின்னராசுக்கு அதிக கடன்கள் இருந்தது என்றும், அவரது மனைவிக்கும் உடல்நிலை சரியில்லாமல் இருந்தது என்றால் சரிதான். மேற்படி கடனை தீர்ப்பதற்காகவும், மனைவிக்கு சிகிச்சை அளிப்பதற்காகவும் தான் சின்னராஜ் கிரைய ஒப்பந்தங்களை ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் சரியல்ல. முதல் கிரைய ஒப்பந்தம் முடிந்த பிறகு எத்தனை மாதங்கள் இரண்டாவது கிரைய ஒப்பந்தத்தை தரப்பினர்கள் ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சாட்சி முதல் கிரைய ஒப்பந்தம் முடிவுற்ற பிறகு 3 மாதங்கள் கழித்து தாவா சொத்தை பொறுத்து இரண்டாவது கிரைய ஒப்பந்தத்தை தரப்பினர்கள் ஏற்படுத்தி கொண்டார்கள் என்று சாட்சி கூறுகிறார். முதல் கிரைய ஒப்பந்தத்திற்கு காலக்கெடு 3 மாதமாகும். இரண்டாவது கிரைய ஒப்பந்தத்தில் முதல் கிரையம் ஏற்படுத்தப்பட்டு ரத்து செய்யப்பட்ட விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இரண்டாவது கிரைய ஒப்பந்தத்தில் கிரைய காலக்கெடு 3 மாதங்களாகும். மேற்படி இரண்டாவது கிரைய ஒப்பந்த

காலக்கெடுவிற்குள் வாதி கிரையத்தை முடிக்க என்ன நடவடிக்கை மேற்கொண்டார் என்றால் சாட்சி என் மூலமாக கிரையம் முடிக்க பிரதிவாதிகளிடம் பேசினார். என் மூலமாக தான் கிரையம் முடிக்க வாதி பிரதிவாதிகளிடம் பேசினார் என்பதை நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 1வது பிரதிவாதியும், அவரது சகோதரரும் ஏற்கனவே ஏற்படுத்தி கொண்ட பாகபிரிவினையை ரத்து செய்து, மீண்டும் பாகபிரிவினை ஏற்படுத்தி கொண்டார்கள் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை ரத்து செய்த விவரத்தை என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 6வது பத்தியில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1வது பிரதிவாதியும் அவரது சகோதரரும் ஏற்படுத்தி கொண்ட முதல் பாகபிரிவினை பத்திரத்திற்கும், இரண்டாவது பாகபிரிவினை பத்திரத்திற்கும் என்ன வேறுபாடு என்றால் சாட்சி தரப்பினர்களுக்கு ஒதுக்கிய சொத்தின் விஸ்தீரணம் சம்பந்தமாக வேறுபாடுகள் இருந்ததால், பின்னிட்டு இரண்டாவது பாகபிரிவினை செய்து கொண்டார்கள். ஏற்கனவே ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து இரண்டாவது பாகபிரிவினையான வா.சா.ஆ.5 ல் 1வது பிரதிவாதியான சின்னராசுக்கு ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ன் படி கிரையம் முடித்து கொள்ளுமாறு 1வது பிரதிவாதி கேட்டும், வாதி மீத கிரைய தொகையை செலுத்தி கிரையம் முடிக்க தயாராக இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணமான பாகபிரிவினையை சின்னராசு வாதி வா.சா.ஆ.3 ன் படி கிரையம் முடிக்க முன்வராததால் பின்னிட்டு காலக்கெடு முடிந்த பிறகு ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆன கிரைய ஒப்பந்த காலக்கெடு முடிந்த பின்னர் நான் சின்னராசுவிடம் பேசி கிரைய முன் தொகை வட்டியுடன் சேர்த்து ரூ.42 லட்சம் செலுத்த 1வது பிரதிவாதி என்னுடன் வந்தார் என்றும், அதற்கு வாதி வாங்க மறுத்து நீதிமன்றத்தில் பார்த்து கொள்வதாக

சொல்லிவிட்டார் என்றால் சரியல்ல. வாதியின் நெருங்கிய நண்பர் மற்றும் நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.27 14:19:54 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.